தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 28 | 4 Pages | 28.8.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 28 | 4 பக்கங்கள் | 28.8.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்

**விளக்கம்:**

அருள் மேற்கொள்ளாதவன் செய்கின்ற அறச்செயலை ஆராய்ந்தால், அஃது அறிவு தெளியாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டாற் போன்றது.

# அமைச்சர்கள்-அதிகாரிகள் சிறப்பாக செயல்பட வேண்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஆக. 28

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அமெரிக்கா செல்கிறார். இதைத்தொடர்ந்து தி.மு.க. தொண்டர்களுக்கு அவர் ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:


தமிழ்நாட்டைப்பொருளாதாரரீதியாக முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான்ஒருடிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை நமது திராவிட மாடல் அரசு நிர்ணயித்து, அதற்கான பணிகளை முனைப்பாகவும் சிறப்பாகவும் மேற்கொண்டு வருகிறது. அந்த முனைப்பின் தொடர்ச்சியாகத்தான் இன்று (ஆகஸ்ட் 27) தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் அமெரிக்காவுக்குப் பயணிக்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சி அமைந்ததிலிருந்தே தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கேற்ற கொள்கை வகுக்கப்பட்டு, பல்வேறு துறைகள் சார்ந்த முதலீடுகளைக் கொண்டு வந்தபடியே இருக்கிறோம். தேடி வருகின்ற முதலீடுகளைப் போலவே, தேடிச் சென்று முதலீடுகளை ஈர்க்கும் பணியையும், இன்றைய உலகளாவிய பொருளாதாரச் சூழலில் உள்ள போட்டிகளைக்கருத்திற்கொண்டுசெயலாற்றி வருகிறது நமது அரசு.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு நம் மாநிலத்திற்கான முதலீடுகளை ஈர்க்கும் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில் புகழும் தரமும் மிக்க பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு உள்ளன.

2024 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் பங்கேற்று, புரிந்துணர்வு ஒப்பந்தங்களைமேற்கொண்டதன்வாயிலாகக் கடந்த மூன்றாண்டுகளில் ஏறத்தாழ 10 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

கடந்த 2182024 அன்று சென்னையில் நடைபெற்றதமிழ்நாடு முதலீட்டாளர் மாநாட்டில் மட்டும ரூபாய் 17,616 கோடி மதிப்பிலான 19 நிறைவடைந்த திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டதுடன், ரூபாய் 51,157 கோடி மதிப்பிலான 28 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1 லட்சத்து 6 ஆயிரத்து 803 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற பன்னாட்டு நிறுவனமான வின்ஃபாஸ்ட் மின்வாகன நிறுவனம் தனது தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டுவிழாவை ஏற்கனவே என் தலைமையில் தூத்துக்குடியில் நடத்தி, ப ணி க ளை விரைவுபடுத்தி உள்ளது.



திராவிட மாடல் அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் கடந்த 3 ஆண்டுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 31 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன.

ஒருடிரில்லியன்அமெரிக்கடாலர் என்ற பொருளாதார இலக்குடனான பயணத்தில் மற்றொரு கட்டம் தான், உங்களில் ஒருவனான நான் மேற்கொள்ளும் இந்த அமெரிக்கப் பயணம்.

ஆகஸ்ட் 29 அன்று சான்பிரான் சிஸ்கோவில் நடைபெறும் முதலீட்டாளர் சந்திப்பில் பங்கேற்று உரை நிகழ்த்துவதுடன், ஆகஸ்ட் 31 அன்று புலம்பெயர்ந்த தமிழர்களைச் சந்தித்து பேசுகிறேன்.

அதன்பின், செப்டம்பர் 2ந் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிகாகோ செல்கிறேன். 10 நாட்களுக்கு அமெரிக்காவில் உள்ள முக்கிய நிறுவன முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தொழில் தொடங்கிட அழைப்பு விடுக்கிறேன். "பார்ச்சூன் 500" நிறுவனத்தின்தலைமை நிர்வாகிகளை சந்தித்து உரையாடவிருக்கிறேன்.

இவை அனைத்தும் தொழில்முதலீடு சார்ந்த பயணம் என்றாலும், அமெரிக்காவாழ் தமிழர்களுக்கென்று தனியாக நேரத்தை ஒதுக்கித் தராமல் இருக்க முடியுமா? செப்டம்பர் 7ம் நாள் சிகாகோவில் தமிழர்களுடனான மாபெரும் சந்திப்பு நிகழவிருக்கிறது.

1971ம் ஆண்டு நம் உயிர் நிகர் தலைவர்தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் சிகாகோ பல்கலைக்கழகத்தின் அரசியல் மண்டபத்தில் அரிய உரை நிகழ்த்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுகளுடன், ஏறத்தாழ 43 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களில் ஒருவனான நான் அமெரிக்காவாழ் தமிழர்களைச் சந்திப்பது எனக்கும் அவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாக அமையும்.

ஆகஸ்ட் 27 தொடங்கி செப்டம்பர் 14 வரையிலான இந்தப் பயணநாட்களின் நோக்கம், தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சி அடுத்து வரும் பல தலைமுறைகளுக்குப் பயன் தருவதாக இருக்கவேண்டும் என்பதுதான். இந்தக் குறுகிய இடைவெளியில், தமிழ்நாடு அரசின் நிர்வாகப் பணிகள் தொய்வின்றித் தொடரவும், மக்கள் நலன் சார்ந்து திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்களின் பயன்கள் தொடர்ந்து கிடைத்திடவும் அமைச்சர்களும் அதிகாரிகளும் சிறப்பான முறையில்செயல்பட வேண்டும்என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

கழகத்தின் மாநில அளவிலான பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் செப்டம்பர் 17ம் நாள் நடைபெறவுள்ள கழகத்தின் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழாவை எழுச்சியுடன் நடத்திடுவதற்கான பணிகளை இப்போதே தொடங்கியிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

முதலமைச்சர் அயல்நாடு சென்றிருந்தாலும், தமிழ்நாட்டில் எந்தவொரு பணியும் தடைபடாமல் நடைபெறுகிறது என்று மக்கள் தரும் சான்றிதழே திராவிட மாடல் அரசுக்குப் பெருமை சேர்ப்பதாகும். அந்தச் சான்றிதழை அமைச்சர்களும், மதிப்பிற்குரிய கழக நிர்வாகிகளும் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் பொறுப்பை உங்களிடம் பகிர்ந்து செல்கிறேன்.

அமைச்சரவைக் கூட்டத்திலும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் ஏற்கனவே இதனை வலியுறுத்தி இருக்கிறேன். ஆட்சிப் பணியும், கழகப்பணியும் தொய்வின்றித் தொடர்வதற்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

அவற்றுடன் ஒருங்கிணைந்து ஒவ்வொருவரும் தங்கள் கடமையினை கண்ணியத்துடன் நிறைவேற்ற வேண்டும். கட்டுப்பாடு காக்கின்ற வகையில், செயலில் வேகம்சொற்களில் கவனம் என்பதை மனதில் நிறுத்தி செயலாற்றுங்கள்.

நம் மீது விமர்சனம் செய்ய விரும்புவோர், விவாதம் நடத்துவோர் ஆகியோருக்கு ஆட்சியிலும் கட்சியிலும் நாம் நிறைவேற்றும் பயனுள்ள செயல்களே பதில்களாக அமையட்டும். வார்த்தைகளால் பதில் சொல்லி அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டியதில்லை.

உங்கள் மீது உங்களில் ஒருவனான எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை செயல்வடிவமாக மாறுவதை ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டு விசாரிப்பேன். பணிகளைக் கண்காணிப்பேன்.

அமெரிக்காவில் இருந்தாலும் தாய்வீடான தமிழ்நாடு பற்றியேதான் என் மனது சிந்திக்கும். பார்வை கண்காணிக்கும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலை பள்ளியில் உள்ள நூலகம் மற்றும் அறிவு சார் மையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நூலகத்திற்கு பயில வரும் மாணவர்களுடன் உரையாற்றினார்.

## தீவிர அரசியலில் இருந்து விலகலா..? சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த மாயாவதி

லக்னோ, ஆக. 28



உத்தரபிரதேச முன்னாள் முதல்மந்திரியும், பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவருமான மாயாவதி (வயது 68) தீவிர அரசியலில் இருந்துஓய்வுபெறஇருப்பதாக சமீபத்தில் தகவல் வெளியாகி இருந்தது. இதை அவர் திட்டவட்டமாக மறுத்து உள்ளார். மேலும் இந்த தகவல்களை பரப்பிய ஊடகங்களையும் அவர் சாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், 'அம்பேத்கரின் கொள்கைகளைப் பின்பற்றும் பகுஜன் சமாஜ் கட்சியினரை பலவீனமாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. சுயமரியாதை மற்றும் சுயகவுரவம் மிக்க கட்சியாக பகுஜன் சமாஜ் கட்சி தொடர்ந்து செயல்படும். எனது கடைசி மூச்சு வரை கட்சியை இதே பாதையில் வழிநடத்துவேன்.

தீவிர அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை. நான் இல்லாதபோது அல்லது உடல்நிலை சரியில்லாத நேரத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் வாரிசாக ஆகாஷ் ஆனந்தை முன்னிறுத்தியது முதல், சில சாதிவெறி ஊடகங்கள் இதுபோன்ற பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றன. எனவே மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதற்கு முன்பு நான் ஜனாதிபதி பதவியை ஏற்க இருப்பதாகவும் வதந்தியைப் பரப்பினார்கள்.

முன்பு கட்சியின் நிறுவனர் கான்ஷிராமுக்கும் ஜனாதிபதி பதவிக்காக அழைப்பு வந்தது. ஆனால், அப்பதவியை ஏற்பது என்பது அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது என்றாகிவிடும். எனவே கட்சியின் நலன் கருதி அரசியலில் தொடர்ந்து ஈடுபட அவர் முடிவு செய்தார். பகுஜன் சமாஜ் கட்சியின் சுயமரியாதை மற்றும் சுயமதிப்புக்காக எனது கடைசி மூச்சு வரை அர்ப்பணிப்புடன் உழைப்பேன் ' என்று மாயாவதி கூறியுள்ளார்.

## போலீசுக்கு பயந்து குளத்தில் குதித்த பசு கடத்தல் குற்றவாளி தண்ணீரில் மூழ்கி பலி

டேராடூன், ஆக. 28

உத்தரகாண்ட் மாநிலத்தில் இருந்து வெளிநாட்டிற்கு பசுக்களை கடத்தும் சம்பவங்கள் அவ்வப்போது அரங்கேறி வருகிறது. இதை தடுக்கும் நடவடிக்கையில் மாநில போலீசார் பசு பாதுகாப்புப்படை என்ற தனிப்பிரிவை அமைத்து தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அம்மாநிலத்தின் ஹரித்வார் மாவட்டம் மடோல்பூர் என்ற கிராமத்தில் பசு கடத்தல் கும்பலை சேர்ந்த சிலர் பதுங்கி இருப்பதாகபோலீசாருக்குநேற்றுஅதிகாலைரகசியதகவல்கிடைத்தது.

இதையடுத்து, அங்கு விரைந்த போலீசார் தீவிர சோதனை நடத்தினர். அப்போது பசு கடத்தல் கும்பலை சேர்ந்த வாசிம் என்ற நபர் பைக்கில் வந்துள்ளார். அவர் போலீசாரை பார்த்ததும் பைக்கில் இருந்து இறங்கி தப்பியோடியுள்ளார். இதனால், வாசிமை போலீசார் விரட்டிச்சென்றுள்ளனர். போலீசாருக்கு பயந்து வாசிம் அருகில் உள்ள குளத்தில் குதித்துள்ளார்.

குளத்தில் குதித்த அவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார். ஆனால், போலீசார் தாக்கியதாலேயே வாசிம் உயிரிழந்ததாக மடோல்பூர் கிராம மக்கள் குற்றஞ்சாட்டினர். மேலும், குளத்தில் மூழ்கி உயிரிழந்த வாசிமின் உடலை போலீசிடம் ஒப்படைக்க மறுத்தனர். இதையடுத்து, கிராம மக்களை தடியடி நடத்தி போலீசார் விரட்டியடித்தனர். மேலும், வாசிமின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குளிர்பானத்தில் மது கலந்து சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை அதிர்ச்சி சம்பவம்

லக்னோ, ஆக. 28

உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தை சேர்ந்த 16 வயது சிறுமி கடந்த 11ம் தேதி தனது கிராமத்தில் உள்ள வயல்பகுதிக்கு சென்றுள்ளார். அப்போது அண்டை கிராமத்தை சேர்ந்த ஆகாஷ், ராம் ஆகிய இரு இளைஞர்கள்சிறுமிக்கு மது கலந்த குளிர்பானத்தை கொடுத்துள்ளனர். இந்த குளிர்பானத்தை குடித்த சிறுமி மயக்கமடைந்துள்ளார். இதை சாதகமாக பயன்படுத்த இளைஞர்கள் சிறுமியை கூட்டு பாலியல் வன்கொ டுமை செய்து ள்ளனர். மேலும், இந்த கொடூர செயலை தங்கள் செல்போ ன்களில் வீடியோ வாக எடுத்து அதை சமூகவலைதளத்தில் பதிவேற்றியுள்ளனர். இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாகபாதிக்கப்பட்டசிறுமியின்தாயார்போலீசில்புகார்அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தலைமறைவாக உள்ள இளைஞர்கள் ஆகாஷ், ராமை தீவிரமாக தேடி வரு கின்றனர்.




# திருத்துறைப்பூண்டி வட்டம் தேசிங்குராஜபுரம் கிராமத்தில் மாபெரும் ரத்ததான முகாம்


திருவாரூர் ஆகஸ்ட் 28

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் தேசிங்குராஜபுரம் கிராமத்தில் மாபெரும் ரத்ததான முகாம் மிகச் சிறப்பாக தேசிங்குராஜபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமை ராய் ட்ரஸ்ட் இன்டர்நேஷனல் நடத்தியது. அவர்களுடன் இணைந்து கோகுலாஷ்டமியை முன்னிட்டு கோகுலம் பேரவை தேசிங்குராஜபுரம் மற்றும் தீவம்பாள்பட்டினம்,பி கே டி நர்சிங் ஹோம் திருத்துறைப்பூண்டி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா இரத்த வங்கி திருவாரூர் ,தமிழ்நாடு குருதிக் கொடையாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் நல சங்கம், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி திருத்துறைப்பூண்டி கிளை, நல்லோர் வட்டம் ,சர்வாலயா அருட்பணி அறப்பணி குழு,அன்பு பாரதம் இலவச அரசு போட்டித் தேர்வு பயிற்சி மையம்,ஒன் நேசன் சைல்டு டிரஸ்ட் ஸ்ரீலங்கா ஆகியோர் இணைந்து நடத்தினர் இரத்ததான முகாமிற்கு ராய் ட்ரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் தலைமை தாங்கினார். கோகுலம் பேரவை ஒருங்கிணைப்பாளர் முருகவேல் ரவி அனைவரையும் வரவேற்றார்.திருவாரூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் லட்சுமி நாராயணன்ரத்ததானமுகாமைதொடங்கி வைத்தார். முகாமிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் துரைராஜ், கோவி ரவி,ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவமனை மேலாளர்கள் ராம் பிரசாத், புருஷோத்தமன்,சர்வாலய அருட்பணி அறப்பணி குழு தலைவர் ஜெயபிரகாஷ், ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் ரத்த தான பிரிவு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இரத்த வங்கி ஊழியர்களான அம்மலு , அனுசியாஸ்ரீ ,கௌசி, சீனிவாசன் உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழு 35 க்கும் மேற்பட்ட அரிய வகை இரத்தங்களை சேகரித்தனர்.இறுதியில் திருவாரூர் ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரிகிற கோவி செந்தில் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# விஜயிடம் தனிக்கட்சி தொடங்க சொன்னதே ராகுல் காந்தி தான்: விஜயதாரணி பேச்சு



சென்னை, ஆக. 27

பாஜக உறுப்பினர் விஜயதாரணி பிரத்யேக பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

காங்கிரசில் கிடைத்த பொறுப்புகளை துறந்து பாஜகவில் இணைந்தேன். எம்எல்ஏ, தேசிய பொதுச் செயலாளர், முதன்மை கொறடா பொறுப்புகளை துறந்தேன்.

பாராளுமன்ற தேர்தலில் பாஜக வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு இருக்கும் என சொல்லப்பட்டது.

ஒரு மூத்த தலைவர் தனக்கு சீட்டு வேண்டுமென பிடிவாதமாக இருந்ததால் அவருக்கு கொடுக்கப்பட்டது.

ஆனாலும் மனவருத்தம் இன்றி பொன். ராதாகிருஷ்ணனுக்காக தேர்தலில் பணியாற்றினேன். தமிழகம் முழுவதும் பாஜகவுக்காக தேர்தல் பணியாற்றினேன்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் பொறுப்பு கேட்டேன்.

பாஜகவில் பெண்களுக்கான அங்கீகாரம் கிடைக்கிறது. எனக்கும் வாக்குறுதி கொடுத்துள்ளார்கள்.

ராகுல் காந்தி கூறிதான் விஜய் கட்சி ஆரம்பித்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் ராகுல் காந்தியை சந்திக்கும் பொழுது காங்கிரஸ் கட்சியில் இளைஞர் அணி போன்ற பொறுப்பின் தலைவராக வேண்டுமென விஜய் விருப்பம் தெரிவித்தார்.

அப்போது, நீங்கள் தமிழகத்தில் அதிக செல்வாக்கு பெற்ற நடிகராக இருக்கும் நிலையில் தனி கட்சி துவங்கினால் தனி ஆட்சி செய்யலாம் என்று ராகுல் காந்தி விஜயிடம் கூறினார். ராகுல் காந்தி கூறியதன் பிரதிபலிப்பாக தான் தற்போது விஜய் கட்சி ஆரம்பித்துள்ளார்.

நான் ஏற்கனவே காங்கிரஸில் இருந்ததால் இதுப்பற்றி எனக்கு முன்னதாகவே தெரியும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஜினி, தி.மு.க.வில் புயலையும் சுனாமியையும் கிளப்பி இருக்கிறார்: தமிழிசை கருத்து



சென்னை, ஆக. 28

நாடு முழுவதும் கிருஷ்ண ஜெயந்தி இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு சென்னை கோபாலபுரம் பகுதியில் உள்ள ஸ்ரீவேணுகோபால சுவாமி கோவிலில் பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சாமி தரிசனம் செய்தார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியில் இருந்து இறங்க வேண்டும் என்பதே எங்களது ஒற்றை குறிக்கோள். செப்டம்பர் 25 வரை எங்களது முழு கவனம் உறுப்பினர் சேர்க்கை.

தி.மு.க.வின் நிகழ்ச்சியில் பங்கேற்ற நடிகர் ரஜினிகாந்த் திமுக ஆலமரம் போன்றது எனக் கூறியிருந்தார். அப்படி தான் தெலுங்கானாவிலும் ஆந்திராவிலும் ஆலமரம் என்றார்கள். அங்கு ஆட்சி மாறி இருக்கிறது. ரஜினிகாந்த் தி.மு.க.வில் புயலையும் சுனாமியையும் உருவாக்கி இருக்கிறார்.

கட்சிக்கு கடுமையாக உழைத்த துரைமுருகன் இன்றும் ஸ்டாலினுக்கு கீழ் இருக்கிறார். அடுத்ததாக உதயநிதிக்கு கீழும் இருக்க வேண்டியுள்ளது. இதனால தான் வாரிசு அரசியலை நாங்கள் வேண்டாம் என்கிறோம். உதயநிதி ஸ்டாலின் துரைமுருகனின் பேச்சை மட்டும் சீரியசாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என சொல்லி இருக்கிறார். அப்போ ரஜினி காந்தின் பேச்சை சீரியசாக எடுத்துக் கொள்ளலாமா?

சீனியர்கள் பலரிடம் இருந்த பொறுப்புகள் தற்போது மற்றவர்களுக்கு மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தொண்டர்கள் இதனை சிந்திக்க வேண்டும். பா.ஜ.க.வின் உறுப்பினர் சேர்க்கை நடந்து வருகிறது. மூத்தவர்களுக்கு பா.ஜ.க.வில் அதிகம் மரியாதை கிடைக்கும். அதனால் உறுப்பினராக பா.ஜ.க.வில் சேர்ந்து கொள்ளுங்கள்.

கலைஞரின் வீட்டிற்கு முன்நின்று அவர்களையே விமர்சனம் செய்யும் அளவிற்கு பாரதத்தில் ஜனநாயகம் இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# 50 ஆபாச வீடியோக்களுடன் சேலம் சாமியார் கைது



சின்னசேலம், ஆக. 28

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் டிரைவராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கு திருமணமாகி மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர். இவருடைய வீட்டின் அருகே உள்ள அய்யனார் கோவில் உள்ளது.

சேலம் போயர்தெருவை சேர்ந்த முத்தையன் என்பவர் அடிக்கடி வந்து வழிபட்டு செல்வார். அது மட்டு மில்லாமல் பில்லி, சூனியம் எடுப்பது, பெண்களை வசீகரம் செய்வது உள்ளிட்ட வேலைகளையும் சாமியார் வேடம் அணிந்து முத்தையன் செய்வார் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் டிரைவருக்கும், முத்தையனுக்கும் பழக்கம் ஏற்பட்டது. அப்போது டிரைவருக்கு பணம் நெருக்கடி ஏற்பட்டது. இதனால் தனது 50 சென்ட் நிலத்தை 4 லட்சத்துக்கு முத்தையனிடம் டிரைவர் கிரையம் செய்து கொடுத்ததாக கூறப்படுகிறது.

நாளடைவில் டிரைவரின் குடும்பத்தினருடன் முத்தையனுக்கு பழக்கம் அதிகமானது. அந்த பழக்கத்தால் நாளடைவில் டிரைவரின் மனைவிக்கும், முத்தையனுக்கும் இடையே தகாத உறவு ஏற்பட்டது. இந்த விஷயம் டிரைவருக்கு தெரியவரவே 2 பேரையும் அழைத்து எச்சரிக்கை விடுத்துள்ளார். இதற்கு மேல் முத்தையனுடன் பழக்கம் வைத்திருந்தால் நம்குடும்பத்திற்கு ஆபத்து ஏற்படும் என கருதிய டிரைவர், சாமியார் முத்தையனுக்கு தரவேண்டிய பணத்தை வட்டியுடன் தயார் செய்து கொடுத்து விட்டு தனது நிலத்தை திரும்ப தர வேண்டும் என கூறியுள்ளார்.

இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த முத்தையன், உனது நிலத்தை திருப்பி கேட்டால் உன் மனைவியுடன் நான் ஆபாசமாக இருந்த புகைப்படத்தை சமூக வலைதளங்களில் பரப்பி விடுவேன் என கூறி மிரட்டி உள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த டிரைவர் சின்னசேலம் போலீசில் புகார் செய்தார். அதன் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த சின்னசேலம் போலீசார் முத்தையனை போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினார்கள்.

அதில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. முத்தையனின் மடிகணினியை போலீசார் சோதனை செய்தனர். அதில் பல பெண்களுடன் உல்லாசமாக இருந்த 50க்கும் மேற்பட்ட வீடியோக்கள் இருந்துள்ளது.

மேலும் அவரிடம் இருந்த 5 செல்போன்கள், ஒரு லேப்டாப், 5 பென்டிரைவ் உள்ளிட்டவைகளை போலீசார் பறிமுதல் செய்தனர். இதையடுத்து முத்தையனை போலீசார் கைது செய்து, கள்ளக்குறிச்சி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# நான் பிச்சை எடுத்து கட்சி நடத்துகிறேன்: சீமான் பகீரங்க பேச்சு



சென்னை, ஆக. 28

திருச்சியில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

பிச்சை எடுத்தது அல்ல ஐபிஎஸ் பதவி என்ற வருண்குமாரின் ஸ்டேட்மெண்டுக்கு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ என்னிடம் காசு இல்லை. மக்களிடம் கையேந்தி தான் கட்சியை நடத்துகிறேன். பிச்சை எடுத்து, திரள் நிதி திரட்டி கட்சி நடத்துகிறேன்.

★ எனது காசிலிருந்தும் தான் சம்பளம் பெறுகிறாய். ஒழுங்காக ஐபிஎஸ் வேலையை பார்க்கட்டும்.

★ கன்னியாகுமரியில் பேசிய துரைமுருகனை திருவள்ளூரில் கைது செய்தததற்கான காரணம் என்ன? ★ சாட்டை துரைமுருகனை கைது செய்த பின்னர் அவரது செல்போன் உரையாடலை வெளியே கசியவிட்டதற்கான காரணம் என்ன?

★ யாருக்கு வேலை செய்கிறீர்கள், ஆடியோ வெளியிடுவதற்கு ஐடி விங்கில் வேலை செய்ய வேண்டியது தானே.

★ ஆடியோவை எடுத்து வெட்டி ஒட்டி வெளியிடுவதால் எத்தனை பேரின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. ★ வருண்குமார் ஐபிஎஸ் பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்து விடலாம்.

★ நாம் தமிழர் கட்சியினர் ஆபாசமாக எழுத மாட்டார்கள்.

★ விருதுநகரில் எழுதியவனை திருச்சிக்கு தூக்கி வந்து கண்ணை கட்டி அடித்தது ஏன்? ★ திருச்சி, புதுக்கோட்டையில் அருகருகே கணவன், மனைவிக்கு யார் சிபாரிசில் பதவி கிடைத்தது.

★ என் குடும்பத்தை பற்றியும் பலரும் விமர்சித்து வருகிறார்கள்.

★ எங்கே குற்றம் நடந்தாலும், திருச்சிக்கு அழைத்து வந்து விசாரிப்பது ஏன்?

★ செல்போனை ஆய்வு செய்ய வேண்டிய வேலை போலீசாருடையது அல்ல. நாங்கள் செல்போனில் பேசுவது எப்படி பொது வெளியில் கசிகிறது?

★ கட்சிக்காரர்களுடன் ஆயிரம் பேசுவோம், அதை எப்படி பொதுவெளியில் வெளியிடுவீர்கள்? என்று கூறினார்.

# மாட்டு கொழுப்புக்குள் பதுக்கி வைத்த 29 நாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல்



பெரியகுளம், ஆக. 28

தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை காடுவெட்டி பகுதியில் பெரியகுளம் அரண்மனைக்கு சொந்தமான புளியந்தோப்பு உள்ளது. இந்த பகுதியில் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக மாட்டுக் கொழுப்புக்குள் நாட்டு வெடிகுண்டுகளை உள்ளே வைத்து பல இடங்களில் வைத்துள்ளதாக தகவல் கிடைத்தது. இதனை பார்த்த அப்பகுதி விவசாயிகள் கிராம காவல் தலைவருக்கு புகார் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து கிராம காவல் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று சோதனை நடத்தினர். அப்போது விலங்குகளை வேட்டையாடுவதற்காக புளியந்தோப்பு பகுதியில் பல இடங்களில் நாட்டு வெடி குண்டுகள் வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அங்கு யாரேனும் உள்ளார்களா என்று விசாரணை மேற்கொண்டனர். போலீசார் வருவதை பார்த்ததும் 2 பேர் தப்பியோட முயன்றனர். இருந்தபோதும் துரத்திச் சென்று போலீசார் அவர்களை பிடிக்க முயன்றபோது ஒருவர் மட்டும் சிக்கினார். பிடிபட்டவர் பெரியகுளம் அருகே உள்ள ஏ. வாடிப்பட்டி பகுதியைச் சேர்ந்த சிவகுமார் (வயது 30 ) என்பதும், தப்பி ஓடிய நபர் அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்த ராஜ் (வயது 36) என்பதும் தெரியவந்தது.

வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக நாட்டு வெடிகுண்டுகளை பதுக்கி வைத்துவிட்டு தப்பி ஓட முயன்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பிடிபட்ட நபரை வைத்து புளியந்தோப்பு பகுதியில் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட 29 நாட்டு வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டது. இதனை தொடர்ந்து பெரியகுளம் வடகரை போலீசாருக்கு கொடுத்த தகவலின் பேரில் போலீசார் மற்றும் வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் அங்கு வந்தனர். அவர்கள் 29 நாட்டு வெடிகுண்டுகளையும் செயலிழக்க வைத்தனர். இதுகுறித்து மேலும் விசாரணை நடத்தி வரும் போலீசார் இவர்கள் வேறு ஏதேனும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட முயன்றார்களா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி ஸ்ரீரங்கத்தில் ஆற்றுக்குள் இறங்கி ஆய்வு செய்த எம்.எல்.ஏ.



திருச்சி, ஆக. 29

திருச்சி காவிரி ஆறு முக்கொம்பு பகுதியில் இருந்து கொள்ளிடம், காவிரி என 2 ஆறுகளாக பிரிந்து செல்கிறது. காவிரி நீர் புதுவாத்தலை மற்றும் ராமாவாத்தலை ஆகிய 2 வாய்க்கால்கள் வழியாக ஸ்ரீரங்கம் பகுதியில் சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த வாய்க்கால்கள் தற்போது ஆகாயத்தாமரை மற்றும் செடி கொடிகள் மண்டி வாய்க்கால் வழியாக தண்ணீர் செல்ல முடியாமல். இதனால் இப்பகுதி விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்வது காலதாமதம் ஆகி வருகிறது.

இதனை அடுத்து இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஸ்ரீரங்கம் எம்.எல்.ஏ. பழனியாண்டியை நேரில் சந்தித்து வாய்க்காலை தூர்வார கோரிக்கை வைத்தனர். இதனையடுத்து உடனடியாக நீர்வளத்துறை அலுவலகத்திற்கு விவசாயிகளுடன் நேரில் சென்ற பழனியாண்டி எம்.எல்.ஏ அங்கிருந்த செயற்பொறியாளர் நித்தியானந்தத்தை சந்தித்து கரையை பலப்படுத்தவும், காவிரி ஆற்றில் குறம்பு தேக்கி வாய்க்கால்களில் தண்ணீரின் அளவை அதிகப்படுத்த கோரிக்கை மனு அளித்தார்.

இதனை தொடர்ந்து அதிகாரிகள் காவிரி ஆற்றில் ஜே.சி.பி. எந்திரம் மற்றும் மணல் மூட்டைகளுடன் பணியில் ஈடுபட்டனர். இந்த வேளையில் அங்கு சென்ற பழனியாண்டி எம்.எல்.ஏ. யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று ஆற்றுக்குள் இறங்கினார்.

ஆற்று தண்ணீரின் அளவை கண்டு, அதற்கு ஏற்றார் போல் கரையின் உயரத்தை உயர்த்துமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். எம்.எல்.ஏ. வின் இந்த நடவடிக்கை அதிகாரிகளை ஒரு கணம் திகைக்க செய்தது. அதே வேளையில் அந்த பகுதி பொதுமக்கள் எம்.எல்.ஏ.வுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

# அண்ணாமலை தான்தோன்றித்தனமாக பேசுகிறார் கே.பி.முனுசாமி காட்டம்



கிருஷ்ணகிரி, ஆக. 28

கிருஷ்ணகிரி மாவட்டம், அ.தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் அண்ணாமலை தான்தோன்றித்தனமாக பேசி வருகிறார். இவர் வெற்றி பெறும் தொகுதியில் தோற்கக்கூடிய தலைமை பொறுப்பில் இருக்கிறார். இதனால் அவருக்கு பயம் வந்துவிட்டது.

ஏனென்றால் அண்ணாமலை தனக்கு தலைமை பொறுப்பு நமக்கு தொடர்ந்து இருக்காது. அதனால் இருக்கின்றவரையில் ஏதாவது கருத்துக்களை சொல்லிவிட்டு போகலாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

நிச்சயமாக அக்கட்சியின் தலைமையில் உள்ளவர்கள் உணர்ந்து,

விரைவில் அவரை இந்த தலைமை பொறுப்பில் இருந்து வெளியேற்றுவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

எப்படி வெளியேற்றுவது என்று அக்கட்சிக்கு தெரியாமல் தான் அண்ணாமலை லண்டனுக்கு படிப்பதற்காக செல்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஏமாற்றி வருகிறார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அடிப்படை உறுப்பினராக இருந்து படிப்படியாக உயர்ந்து இன்று அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராக ஆகி உள்ளார்.

பா.ஜ.க. மாநில தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.

இந்த 3 ஆண்டுகளில் அவர் எந்த மக்களையும் சந்திக்கவில்லை. மாறாக ஊடகங்களையும், பத்திரிகைகளையும் சந்தித்து அரசியல் செய்து வருகிறார்.

இந்த 3 ஆண்டுகளில் ஒரு தற்குறி எப்படி பேசுவாரோ அதுபோல்தான் அவர் கூறும் கருத்துகள் ஒவ்வொன்றும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது ஊடகங்களுக்கு அவர் கூறியதாவது,

இந்த தேர்தலில் 25 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும் என்று சொன்னார்.

மேலும் அ.தி.மு.க. காணாமல் போய்விடும் என்றும், பா.ஜ.க. 2வது பெரிய கட்சி என்றும் கூறினார்.

இதுகுறித்து நான் அவரிடம் கேட்கிறேன், 2வது பெரிய கட்சி கூறினீர்கள் ஆனால் ஒரு இடத்திலாவது நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்களா?

கடந்த முறை வென்ற கன்னியாகுமரி தொகுதியில் தோல்வியடைந்த அண்ணாமலைக்கு பயம் வந்துவிட்டதால் தான் தோன்றித்தனமாக பேசி வருகிறார்.

# 'யாருக்கும் நான் விருந்து வைக்கவில்லை' தி.மு.க. எம்.எல்.ஏ. பேட்டி



சென்னை, ஆக. 28

தமிழக அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட இருப்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு பரவிய வதந்தி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த சமயத்தில் அமைச்சர் பதவியை எதிர்பார்த்து விருந்து வைத்த எம்.எல்.ஏ. என்று மற்றொரு தகவலும் பரவியது. ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்று சேலம் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது:

அமைச்சர் பதவியை எதிர்பார்த்து விருந்து வைத்த எம்.எல்.ஏ. என்று என்னை குறிப்பிட்டு ஒரு செய்தி வெளி வந்துள்ளதை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். நான் எந்த விருந்தும் வைக்கவில்லை.

எனது வளர்ச்சியை பொறுக்க முடியாத சிலர் இவ்வாறான உண்மைக்கு மாறான தகவல்களை பரப்பி விட்டுள்ளனர். அதில் எந்த உண்மையும் இல்லை.

கழக வளர்ச்சி ஒன்றே குறிக்கோள் என்ற வகையில் நான் செயல்பட்டு வருகிறேன். எனது பெயருக்கு யாரும் களங்கம் கற்பிக்க விட மாட்டேன். எனது மக்கள் பணி, கழக செயல் பாடுகள் இன்னும் வேகமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர் பின்னலாடை நிறுவனத்தில் தீ விபத்து

திருப்பூர், ஆக. 28

திருப்பூர் மங்கலம் சாலை ஆண்டிபாளையம் பகுதியை சேர்ந்தவர் பாலுமணி. இவர் இடுவம்பாளையம் செல்லும் வழியில் சொந்தமாக பனியன் நிறுவனம் நடத்தி வருகிறார். இங்கு 50க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். பின்னலாடை துணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதற்காக பின்னலாடை உற்பத்திக்கு பயன்படக்கூடிய சிங்கர், ஓவர்லாக், பேட்லாக் தையல் எந்திரங்கள் மற்றும் பின்னலாடை துணிகள் வைக்கப்பட்டிருந்தது. நேற்று விடுமுறை தினம் என்பதால் நிறுவனம் பூட்டப்பட்டிருந்த நிலையில் இன்று அதிகாலை நிறுவனத்தில் தீ பற்றி எரிந்துள்ளது. நிறுவனம் முழுவதும் துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததால் தீ மளமளவென பற்றி எரிந்துள்ளது. இதனை கண்ட அக்கம்பக்கத்தினர் உடனடியாக பின்னலாடை நிறுவன உரிமையாளருக்கும் தீயணைப்புத்துறையினருக்கும் தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருப்பூர் தெற்கு தீயணைப்பு துறையினர் சுமார் 4 மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த தீ விபத்தில் பின்னலாடை நிறுவனத்தில் இருந்த 200 தையல் எந்திரங்கள், நூல் பண்டல்கள், ஏற்றுமதிக்கு தயாராக இருந்த டீசர்ட்டுகள் என பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமானது. இதுகுறித்து திருப்பூர் மத்திய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 102 மாணவர்கள் 30 நிமிடம் நிறுத்தாமல் தற்காப்பு கலைகள்: உலக சாதனை




மாமல்லபுரம், ஆக. 28

கல்பாக்கம் அடுத்த சதுரங்கபட்டினம் டச்சுக் கோட்டை அருகே உள்ள கடற்கரையில் தற்காப்பு கலையின் "வேல்டு ரெக்கார்ட்" சான்றிதழ் தேர்விற்காக ஆசான் மார்ஷியல் அரிஸ்மற்றும்ஸ்போர்ட்ஸ் அகாடெமி இன்டர்நேஷனல் சார்பில், குலோபல் வேல்டு ரெக்கார்ட் அமைப்பின் அதிகாரி ராஜேஸ்குமார் முன்னிலையில் 30 நிமிடத்தில், 3 வயது முதல் 20 வயது வரையான 102 பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் சுருள் வாள் வீச்சு, வேல் கம்பு, வாட்டர் பேலன்ஸ், பைட்டிங் ஸ்டிக், சிலம்பம் ஒற்றை சுற்று, இரட்டை சுற்று ஆகிய தற்காப்பு கலைகளை தொடர்ந்து செய்து காண்பித்தனர்.

நிகழ்ச்சியின் முடிவில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும், பயிற்சி பள்ளிக்கும் சான்றிதழ், பதக்கம் வழங்கப்பட்டது. மாமல்லன் தெக்கன் களரி ஆசான் அசோக்குமார், ம.தி.மு.க துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா, கல்பாக்கம்அணுமின்நிலைய இயக்குனர் சேஷையா, திருக்கழுகுன்றம் பேரூராட்சி தலைவர் யுவராஜ், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற பீடி இலை மூட்டைகள் பறிமுதல்



தூத்துக்குடி. ஆக. 28

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரை வழியாக பீடி இலை மூட்டைகள் கடத்தப்பட இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதா தலைமையிலான போலீசார் தூத்துக்குடி கடற்கரையோர பகுதியில் நள்ளிரவில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது திரேஸ்புரம் கடற்கரையின் வடக்கு பகுதியில் படகு பழுது சரிபார்க்கும் இடத்தில் நள்ளிரவில் சந்தேகத்திற்கு இடமாக நின்ற லோடு ஆட்டோவை சோதனை செய்தனர்.

அப்போது அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக எடுத்துவரப்பட்ட சுமார் 30 கிலோ எடை கொண்ட 9 பீடி இலை மூட்டைகள் இருந்தது தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து அவற்றையும், அங்கிருந்த மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்த போலீசார் கடத்தலில் ஈடுபட்ட திரேஸ்புரத்தை சேர்ந்த ஆரோக்கிய ஜான்சன் (வயது 36) என்பரை கைது செய்தனர்.

மேலும் ஆரோக்கிய ஜான்சனுக்கு சொந்தமான பைபர் படகில் கடத்தலில் ஈடுபட்ட மற்றவர்கள், மீதி இருந்த பீடி இலை மூட்டைகளுடன் கடலுக்குள் தப்பி சென்றதாக கூறப்படுகிறது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி தப்பி ஓடிவர்களை பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# கந்த மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்: அன்னதானம் வழங்கிய இஸ்லாமியர்கள்



போச்சம்பள்ளி, ஆக. 28

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த வடமேலம்பட்டி கிராமத்தில் கந்த மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலை புறனமைக்கபட்டு கும்பாபிஷேகம் செய்ய கிராம மக்கள் தீர்மானித்து கோவில் கட்டுமான பணிகள் மற்றும் வண்ணம் தீட்டும் பணிகளை செய்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் செய்ய கிராம மக்கள் தீர்மானித்து விரதம் இருந்து கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நிலையில் காலை, மாலை என கடந்த 15 நாட்களாக பூஜை நடந்து வந்த நிலையில் வட மலைப்பட்டி கிராமத்தில் உள்ள இஸ்லாமிய மக்கள் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் சாமிக்கு சீர் வரிசை எடுத்து வந்து அம்மனுக்கு பூஜை செய்தனர்.

இதில் சாமிக்கு சீர் கொண்டு வந்து அதனை மேளதாளம் பம்பை வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக வந்தனர். பின்னர் கோவிலின் முன்பு இந்து, இஸ்லாமிய மக்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஆரத்தழுவி தங்களது அன்பை வெளிப்படுத்திக் கொண்டனர்.

பின்னர் சீர்வரிசைகளை கோவில் நிர்வாகத்திடம் வழங்க அதனை பூசாரியிடம் கொடுத்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

பின்னர் அங்கிருந்த பொதுமக்களுக்கு இஸ்லாமியர்கள் சார்பில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர்.

இரு சமுதாய மக்கள் ஒன்றிணைந்து இந்து கோவிலுக்கு சீர் கொண்டு வந்து பூஜை செய்து அன்னதான வழங்கிய சம்பவம் காண்போரை நெகிழச் செய்தது.

# அண்ணா அறிவாலயத்திற்குள் பீர்பாட்டில் வீச்சு

சென்னை, ஆக. 28

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்திற்குள் 2 பீர்பாட்டில்கள் வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இருசக்கர வாகனத்தில் வந்து அண்ணா அறிவாலயத்திற்குள் 2 பீர்பாட்டில்களை வீசிய கோவர்தனை பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். போலீசார் விசாரணையில் கோவர்தன் கண்ணகி நகரை சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது.

மேலும் அவரிடம் பீர்பாட்டில்களை வீசியது ஏன் என போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்நாட்டை சேர்ந்த 8 மீனவர்கள் கைது: இலங்கை கடற்படை தொடர்ந்து அட்டூழியம்



ராமேஸ்வரம், ஆக. 28

தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. இலங்கை கடற்படையின் அத்துமீறலால் தமிழ்நாடு மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடர்கதையாகி வருகிறது. இதனால் மீனவர்கள் அச்சத்துடன் கடலுக்கு செல்லும் நிலை நீடிக்கிறது. கைது நடவடிக்கையை தடுக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் இலங்கை கடற்படையால் தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். தனுஷ்கோடி கடல் பகுதிக்கும், தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 8 பேரும் கைது செய்யப்பட்டனர். மீனவர்கள் சென்ற விசைப் படகையும் பறிமுதல் செய்து இலங்கை கடற்படை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 8 ராமேஸ்வரம் மீனவர்களும் மன்னார் கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# திடீரென தீப்பற்றி எரிந்த இருசக்கர வாகனம்

செங்கல்பட்டு, ஆக. 28

செங்கல்பட்டு அருகே திடீரென தீப்பற்றி எரிந்த இருசக்கர வாகனத்தால் பரபரப்பு ஏற்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம் புளிப்பாக்கம் அருகே சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தாம்பரத்தில் இருந்து திருச்சி மார்க்கமாக பல்சர் இருசக்கர வாகனத்தில் இளைஞர் ஒருவர் சென்று கொண்டிருந்தார். அப்போது, எதிர்பாராத விதமாக இருசக்கர வாகனத்தில் இன்ஜின் பகுதி திடீரென தீப்பற்றி எரியத்தொடங்கியது.

பின்பு இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கிய வாலிபர் வாகனத்தை ஓரமாக நிறுத்தினார். பின்பு, தீ மளமள என எரிந்து இருசக்கர வாகனம் முழுவதும் தீயில் கருகியது. இதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியது. பின்பு, தீ விபத்து குறித்து தகவல் அறிந்து வந்த தீயணைப்பு துறையினர் இருசக்கர வாகனத்தில் எவ்வாறு தீப்பற்றியது என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மசினகுடியில் வனத்தையொட்டிய ரேசன் கடைக்கு சூரிய மின்வேலி பாதுகாப்பு



ஊட்டி, ஆக. 28

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வனத்தையொட்டிய கிராமங்களில் யானைகள் புகுந்து ரேசன் கடைகளை உடைத்து அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுபொருட்களை சேதப்படுத்தி வருவது தொடர்கதையாக உள்ளது.

இதனால் ஊழியர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதுடன், உணவு பொருட்கள் சேதம் அடைவதால் அதற்கான தொகையை ஊழியர்கள் ஈடு செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இதனால் வனப்பகுதிகளையொட்டி உள்ள ரேசன் கடைகளில் பணிபுரிவதற்கு ஊழியர்கள் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

குறிப்பாக நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட மசினகுடி, கோவை மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட வால்பாறை ஆகிய இடங்களில் இந்த பாதிப்பு அதிகளவில் உள்ளது.

மசினகுடியில் இருந்து மாயாறு செல்லும் சாலையில் ரேசன் கடை உள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு நள்ளிரவில் ரேசன் கடையை உடைத்து அரிசி உள்ளிட்ட பொருட்களை காட்டு யானை தூக்கி வெளியே வீசியுள்ளது.

இதில் கடையின் கதவுகள் உள்பட பல்வேறு பொருட்களும் சேதமாகின. இதனால் அருகே உள்ள கட்டிடத்தில் பொருட்களை மாற்றி வைத்து பொதுமக்களுக்கு ரேசன் பொருட்கள் வழங்கப்பட்டன.

காட்டு யானை சேதப்படுத்திய ரேசன் கடை கட்டிடம் சீரமைக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் அப்பகுதிக்கு வந்த காட்டு யானை சீரமைக்கப்பட்ட ரேசன் கடையை மீண்டும் சேதப்படுத்தி ஷட்டரை உடைத்தது.

இதையடுத்து கூட்டுறவு இணைப்பதிவாளர் தயாளன் அறிவுரைப்படி மசினகுடி ரேசன் கடைக்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் ரேசன் கடையை சுற்றிலும் சூரிய மின்வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு இணைப்பதிவாளர் தயாளன் கூறியதாவது:

மசினகுடி ரேசன் கடையை பாதுகாக்க சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பி வலை, இரும்பு கேட்ட, இரும்பு ஷட்டர் என மூன்று அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக ரேசன் கடைகளை யானைகள் சேதப்படுத்துவது தடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இதேபோல் வனப் பகுதியையொட்டி உள்ள அனைத்து ரேசன் கடைகளையும் பாதுகாக்க இந்த நடைமுறை ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அண்ணாமலை செல்லும் இடமெல்லாம் கருப்புக்கொடி காட்டுவோம் அ.தி.மு.க. போஸ்டர் யுத்தம்




மானாமதுரை, ஆக. 28

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மற்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு இடையே வார்த்தை போர் பல மாதங்களாக தொடர்ந்து வருகிறது. பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே கூட்டணி ஏற்படும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தலைவர்களின் கருத்து மோதல் அதனை பொய்யாக்கியது.

அ.தி.மு.க.வின் மூத்த தலைவர்கள் குறித்து பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறிய கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியதோடு மோதல் போக்கையும் அதிகரிக்க செய்தது. எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜூ ஆகியோர் அண்ணாமலைக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை அளித்து வருகிறார்கள்.

இதற்கிடையே 2026ம் ஆண்டு நடைபெறும் தமிழக சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று அ.தி.மு.க. ஆட்சிக்கு வரமுடியாது என்றும், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதவிக்கு வந்தது தொடர்பாகவும் சர்ச்சைக் குரிய கருத்துகளை பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை சமீபத்தில் மீண்டும் தெரிவித்து இருந்தார்.

இதற்கு அ.தி.மு.க. மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்தநிலையில் அண்ணாமலைக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் சிவகங்கை மாவட்ட அ.தி.மு.க. சார்பில் கண்டன சுவரொட்டிகள் திருப்புவனம், மானாமதுரை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஒட் டப்பட்டுள்ளன. அந்த போஸ்டரில் அண்ணாமலையே எச்சரிக்கிறோம். அ.தி.மு.க. பற்றியோ, கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் பற்றியோ, கழக அம்மா பேரவைச் செயலாளர் ஆர்.பி.உதயகுமார் பற்றியோதவறாக பேசினால், அண்ணாமலையே நீ செல்லும் இடமெல்லாம் கருப்புக்கொடி காட்டுவோம் என்று எச்சரிக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட அ.தி.மு.க. இளைஞரணி சார்பில் அண்ணாமலைக்கு எதிராக ஒட்டப்பட்டுள்ள இந்த போஸ்டர்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நான் சும்மா தானே போய்கிட்டு இருக்கேன், என்னை ஏன்டா தொந்தரவு பண்றீங்க: கைகூப்பி கும்பிட்ட கரடி



ஊட்டி, ஆக. 28

நீலகிரி மாவட்டத்தில் சமீப காலமாக வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீர்தேடி மலையடிவாரங்களில் இருக்கும் குடியிருப்பு பகுதிகளுக்கு வந்து செல்வது வழக்கமாகி விட்டது.

இந்நிலையில் சுற்றுலா பயணிகள் தங்களின் வாகனங்களில் கைகாட்டிமஞ்சூர் சாலை வழியாக ஊட்டிக்கு புறப்பட்டு வந்தனர். அப்போது பெங்கால் மட்டம்கேரிகண்டி சாலையில் ஒரு கரடி சாலையோரம் நடந்துசென்றது.

தொடர்ந்து அவ்வழியே சென்ற வாகனஓட்டிகள் அந்த கரடியை செல்போன் மூலம் வீடியோ பதிவு செய்தனர்.

இதனை பார்த்த கரடி "நான் சும்மாதானே போய்கிட்டு இருக்கேன், என்னை ஏன்டா தொந்தரவு பண்றீங்க" என்பது போல் கையெடுத்து கும்பிட்ட காட்சிகள் வீடியோவில் பதிவாகி உள்ளது. இந்த காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

குன்னூர் கிளண்டல் பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற மின்வாரிய அலுவலர் வாசு என்பவரின் வீட்டுக்குள் நள்ளிரவு நேரத்தில் 2 கரடிகள் புகுந்தன. பின்னர் அவை சமையல் அறையில் இருந்த சமையல் எண்ணெயை ஆசைதீர குடித்து தீர்த்தன.

அப்போது வாசு தற்செயலாக சமையல் அறைக்கு வந்தார். அங்கு 2 கரடிகள் நிற்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தொடர்ந்து அவர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் தீப்பந்தங்களை காட்டி வீட்டுக்குள் நின்ற கரடிகளை விரட்டினார். இருப்பினும் அந்த கரடிகள் சமையல் அறையில் இருந்த எண்ணை கேனையும் எடுத்துச் சென்றன.

# தொடர் விடுமுறை: ஊட்டியில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்



ஊட்டி, ஆக. 28

மலைகளின் அரசி என அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்திலுள்ள சுற்றுலா தலங்களை காண கேரளா, கா்நாடகா மற்றும் சமவெளி பிரதேசங்களில் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கானசுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர்.

அவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள் ஊட்டியிலுள்ள உலகப்புகழ்பெற்ற அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, சிம்ஸ் பூங்கா, படகு இல்லம், பைக்காரா படகு இல்லம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலாத் தலங்களை கண்டு ரசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கிருஷ்ணஜெயந்தி மற்றும் வார விடுமுறை ஆகிய தொடா் விடுமுறையையொட்டி ஊட்டி சுற்றுலா தலங்களில் சுற்றுலாப் பயணிகள்கூட்டம்அலைமோதி காணப்பட்டது.

அதிலும் குறிப்பாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவிலுள்ள வானுயா்ந்த மரங்கள், கண்ணாடி மாளிகையில் பூத்துக்குலுங்கும் வண்ண வண்ண மலா்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனா். மேலும் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவித்தபடி உற்சாகமாக படகு சவாரி செய்து விடுமுறையை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனா்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழையின் காரணமாக வெறிச்சோடி இருந்த சுற்றுலா மையங்கள், தற்போது சுற்றுலாப் பயணிகளால் களைகட்டி காணப்படுகிறது.

மேலும் ஊட்டிக்கு வந்து செல்பவர்கள் மலை ரெயிலில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் குன்னூர்ஊட்டி மலை ரயிலில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்து வருகிறது.

## கோட் படத்தின் புது அப்டேட் கொடுத்த பிரசாந்த்



வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடித்துள்ள 'கோட்' (Greatest of all time) திரைப்படம் ரசிகர்களின் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தில் மோகன், சினேகா, பிரசாந்த், பிரபுதேவா, அஜ்மல், மீனாட்சி சவுத்ரி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர்ராஜா இசையமைத்துள்ள இந்த திரைப்படம் செப்டம்பர் 5ந்தேதி வெளியாகிறது.

இந்நிலையில், படம் ஓடும் நேரம் குறித்து நடிகர் பிரசாந்த், 'கோட் படம் 179 நிமிடங்கள் ஓடும் முழு நீளப்படம். கிட்டத்தட்ட மூன்று மணிநேர படம். இந்த திரைப் படத்தில் வெங்கட்பிரபுவின் திரைக்கதை மிகவும் அருமையாக உள்ளது. படத்தில் நடித்துள்ள அனைவருக்கும் முக்கியத்துவம் நிறைந்த கதாபாத்திரம் உள்ளது. இது முழு நீளப்படமாக இருந்தாலும் படத்தின் திரைக்கதை ரசிகர்களுக்கு சலிப்பை ஏற்படாத வகையில் இருக்கும்' என்று கூறியுள்ளார்.


மேலும் கோட் திரைப்படம் கர்நாடகா மற்றும் கேரளாவில் செப்டம்பர் 5ந்தேதி காலை 7 மணிக்கு வெளியாகிறது. தமிழ்நாட்டில் காலை 9 மணிக்கு தான் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தனது நீண்ட நாள் காதலனை கரம் பிடித்தார் எமி ஜாக்சன்



2010 ஆம் ஆண்டில் மதராசப்பட்டினம் திரைப்படத்தில் நடித்து கதாநாயகியாக அறிமுகமாகினார் நடிகை எமி ஜாக்சன். அப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து ஏக் தீவானா தா, தாண்டவம், தங்க மகன், கெத்து, தெறி மற்றும் பல வெற்றிப் படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார். எமி ஜாக்சன் மற்றும் அவரது காதலனான எட் வெஸ்ட்விக் கடந்த ஜனவரி மாதம் நிச்சயதார்த்தம் செய்துக் கொண்டனர். எமி ஜாக்சனுக்கு ஏற்கனவே ஜார்ஜ் என்பவருடன் திருமணமாகி ஒரு மகன் இருக்கிறார். சில காரணத்தினால் அவர்களுக்கு ஒத்துப்போவாதலால் விவாகரத்து செய்துக் கொண்டனர். இந்நிலையில் 2022 ஆம் ஆண்டு எமி, எட் வெஸ்ட்விக்கை காதலிக்க தொடங்கினார். எட் ஒரு பிரபலமான பிரிட்டிஸ் நடிகராவார். நீண்ட நாட்கள் காதலர்களாக வலம் வந்த இந்த ஜோடி இன்று திருமணம் செய்துக் கொண்டனர். இதுக்குறித்து எமி அவரது திருமண புகைப்படங்களை இன்ஸ்டகிராமில் பதிவிட்டுள்ளார். அதில் இருவரும் அழகான வெண்மையான கவுன் மற்றும் கோட் சூட் கையில் பூங்கொத்துடன் காணப்படுகின்றனர். இப்புகைப்படம் தற்பொழுது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## 'நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்' படப்பாடலின் புதிய அப்டேட்




நடிகர் தனுஷ் சமீபத்தில் ராயன் திரைப்படத்தை இயக்கி நடித்திருந்தார். இப்படம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. விமர்சன ரீதியாகவும், வணிக ரீதியாகவும் மாபெரும் வெற்றியடைந்தது.

இப்படத்தை தொடர்ந்து 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' என்ற திரைப்படத்தை இயக்கவுள்ளார். இது ஒரு ராம் காம் கதைக்களத்தில் உருவாகும் திரைப்படமாகும். இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் விரைவில் வெளியாகும் என படக்குழு நேற்று அறிவித்து இருந்தனர்.

இப்பாடலிற்கு கோல்டன் ஸ்பேர்ரோ என்ற தலைப்பு வைத்துள்ளனர். மேலும் இப்பாடலைக் குறித்து ஒரு அப்டேட் வெளியாகியுள்ளது. இப்பாடலில் நடிகை பிரியங்கா மோகன் கேமியோ பெர்ஃபாமன்ஸ் செய்து இருக்கிறார் என தெரிவித்துள்ளனர். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் பிரியங்கா மோகன் மடி சேரி லுக்கில் இருக்கிறார்.

இதனால் இப்பாடலின் மீது ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இப்படத்தில் மாத்யூ தாமஸ், பிரியா பிரகாஷ் வாரியர், அனிகா சுரேந்திரன், ரபியா காடுன் மற்றும் பவிஷ் முன்ன்ணி கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளனர், இப்படத்தை தனுஷின் வுண்டர்பார் பிலிம்ஸ் தயாரிக்கவுள்ளது.

## நடிகை இனியாவின் புது துவக்கம்.. ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ



தமிழ் திரையுலகில் "வாகை சூடவா" திரைப்படத்தில் நடித்து புகழ் பெற்றவர் நடிகை இனியா. நடிப்பு மட்டுமின்றி பலதுறைகளில் கவனம் செலுத்தி வரும் நடிகை இனியா புதிதாக நடன பள்ளி துவங்கியுள்ளார்.

ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ (AATREYA DANCE STUDIO) என்ற பெயரில் புதிய நடனப் பள்ளியை துவங்கி இருக்கிறார். நடிகை இனியாவின் குரு அருண் நந்தகுமார் ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோவின் இணை நிறுவனராக உள்ளார். துபாயில் உள்ள சர்வதேச வர்த்தக மையத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் நடிகை இனியா மற்றும் அவரது குழுவினர் இணைந்து சிறப்பு நடன நிகழ்ச்சியை நடத்தி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். இதோடு விருது வழங்கும் நிகழ்ச்சியை பின்னணியில் இருந்து நேர்த்தியாக அனைவரும் ரசிக்கும் வகையில் இயக்கி இருக்கிறார் இனியா. இந்த நிகழ்ச்சியின் மூலம் இனியா ஷோ டிரைக்டர் அவதாரமும் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடனத்துறையில் பாரம்பரியம் மற்றும் நவீன கலை இரண்டையும் கலந்து புதுவித கலை வடிவம் கற்பிப்பதில் ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ சிறந்து விளங்குகிறது. பல்வகை நடனங்களை கற்றுக் கொடுப்பதோடு, மேடை நிகழ்ச்சிகள், விருது வழங்கும் விழாக்கள், பிரபலங்கள் கலந்து கொள்ளும் விழாக்கள், பிராண்டு அறிமுக நிகழ்வுகள், சிறப்பு விழாக்கள், பருவகால நிகழ்வுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் என பலவித நிகழ்ச்சிகளை நடத்துவதிலும் ஆத்ரேயா முழுவீச்சில் செயல்படுகிறது.

ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ குழுவினர் சமகால நடனம், செமி கிளாசிக்கல், திரைப்பட நடனம், ஃபியூஷன், கதக், ஒடிசி, அக்ரோபடிக், ஏரியல், தீ நடனம், லத்தீன் நடனம், ஹிப்ஹாப் நடனம் மற்றும் பண்பாட்டு கலை வடிவங்களை மிக நேர்த்தியாக ஆடும் வல்லமை பெற்றுள்ளனர்.

கலையை அதன் உண்மை வடிவத்தில் மக்களிடையே கொண்டுசேர்க்க ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ பாலமாக செயல்படும். கண்கவர் நிகழ்ச்சிகள், அழகிய கதைகளை கொண்டு சேர்த்தல் என ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ கலை நிகழ்ச்சிகள் தயாரிப்புக்கான ஒற்றை தளமாக விளங்குகிறது.

கலைத்துறையில் பிசியாக வலம்வரும் நடிகை இனியா, அதே துறை சார்ந்த விஷயங்களில் பல புதிய முன்னெடுப்புகளை செய்து வருகிறார். அதன்படி அவர் ஏற்கனவே அனோரா ஆர்ட் ஸ்டூடியோ பெயரில் ஆடை வடிவமைப்பு மற்றும் ஸ்டூடியோ துறையிலும் ஈடுபட்டுள்ளார். சமீபத்தில் இதன் ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும், இந்தியாவை தொடர்ந்து மலேசியாவிலும் அனோரா ஆர்ட் ஸ்டூடியோ துவங்கப்பட்டது. தற்போது இந்த ஸ்டூடியோ இந்தியா மற்றும் மலேசியா என சர்வதேச கிளைகளை கொண்டுள்ளது.

துபாயில் வைத்து ஆத்ரேயா டான்ஸ் ஸ்டூடியோ துவங்கப்பட்ட நிலையில், அங்கிருந்து இந்தியா திரும்பிய இனியா படப்பிடிப்புகளில் கலந்து கொண்டு வருகிறார். இவர் தற்போது தெலுங்கில் உருவாகும் "ஸ்வீட்டி நாட்டி கிரேஸி" படத்தில் நடித்து வருகிறார். இதுதவிர மலையாளத்தில் "கேங்ஸ் ஆஃப் சுகுமாரகுருப்" படத்திலும், தமிழில் "சீரன்" என்ற படத்திலும் நடித்து வருகிறார்.

## சொன்ன தேதியில் வெளியாகுமா சூர்யாவின் கங்குவா? அதிர்ச்சி தகவல்




சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாகி உள்ள படம் 'கங்குவா'. 38 மொழிகளில் 3டி மற்றும் ஐமேக்ஸ் தொழில்நுட்பத்தில் பிரம்மாண்ட பான் இந்தியா படமாக இந்த படத்தை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் வெளியிட உள்ளது. வருகிற அக்டோபர் 10 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

சமீபத்தில் வெளியான படத்தின் டிரைலர் ரசிகர்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. டிரைலரின் காட்சிகள் மிகவும் வைரலாகியது. இதே அக்டோபர் 10 ஆம் தேதி ரஜினிகாந்த் நடிப்பில் டி.ஜே ஞானவேல் இயக்கத்தில் வெளிவர இருக்கும் திரைப்படம் வேட்டையன்.

வேட்டையன் திரைப்படத்தின் இயக்குனர் இதற்கு முன் சூர்யா நடிப்பில் ஜெய் பீம் திரைப்படத்தை இயக்கியது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது கங்குவா திரைப்படத்தின் ரிலீஸ் தேதி ஒத்திவைக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. திரைப்படம் தீபாவளிக்கு வெளியிட படக்குழு திட்டமிடுகின்றனர் என கூறுகின்றனர். இதுக்குறித்து அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாமதத்திற்கு படத்தின் போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகள் முடிக்காமல் இருப்பது தான் காரணம் என கூறப்படுகிறது.

## பென் ஸ்டோக்ஸ், ரூட் இல்லை.. இங்கிலாந்தின் முக்கிய வீரர் இவர்தான் மைக்கேல் வாகன்




இங்கிலாந்து அணி சொந்த மண்ணில் இலங்கை அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் தொடக்க ஆட்டக்காரர் ஜாக் கிரவுலி மற்றும் கேப்டன் ஸ்டோக்ஸ் இருவரும் காயத்தால் இடம் பெறவில்லை. மேலும் முதல் டெஸ்டில் காயம் அடைந்து அதிவேக பந்துவீச்சாளர் மார்க் வுட் தொடரை விட்டு விலகி உள்ளார்.

இந்த நிலையில் தட்டையான ஆடுகளங்களில் பென் ஸ்டோக்சை விட மார்க் வுட் முக்கிய வீரர் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மைக்கேல் வாகன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

நீங்கள் பேட்டிங் செய்ய சாதகமான தட்டையான ஆடுகளத்தில் விளையாடும் பொழுது, இங்கிலாந்து அணிக்கு கேப்டன் பென் ஸ்டோக்சை விட மிக முக்கியமானவர் மார்க் வுட்தான். ஆனால் அவர் தற்போது காயம் காரணமாக இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து வெளியேறியிருக்கிறார்.

முதல் டெஸ்ட் போட்டியில் பேட்டிங் செய்வதற்கு ஆடுகளம் சாதகமாக இருந்த நிலையில், இலங்கை அணியின் தினேஷ் சண்டிமல் மற்றும் கமிந்து மெண்டிஸ் இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த பொழுது, காயத்தால் மார்க் வுட் வெளியேறியிருந்தது எவ்வளவு பின்னடைவாக இருந்தது என்பதை காண முடிந்தது.

பாகிஸ்தானிலும் நியூசிலாந்திலும் இப்படியான ஆடுகளத்தில் 20 விக்கெட்டுகளை எடுக்க என்ன செய்வது என வழிமுறையை கண்டுபிடிக்க வேண்டும். அடுத்த ஆண்டு இங்கிலாந்து அணி விளையாடும் டெஸ்டுகளில் 60 முதல் 70 சதவீதம் விளையாடுவதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் மார்க் வுட்டை பாதுகாப்பாக வைக்க வேண்டும். அவரால் எல்லா டெஸ்ட் போட்டியும் விளையாட முடியாது.

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் அட்டவணையில் இந்தியாவை உள்நாட்டில் வீழ்த்துவதற்கும், ஆஸ்திரேலியா சென்று அவர்களை வீழ்த்துவதற்கும் மார்க் வுட் மிகவும் முக்கியமான ஒரு கருவியாக இருப்பார். இங்கிலாந்து அணியில் அவர் இல்லாமல் போனால், அதை இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மிகவும் விரும்பும்.

ஆர்ச்சர் கூட 95 மைல் வேகத்தில் தொடர்ந்து வீசியது கிடையாது. ஆனால் மார்க் வுட் அதை தொடர்ந்து செய்கிறார்.அவரது வெறித்தனமான வேகம் கொண்டு வீசக்கூடிய பந்துவீச்சாளர்கள் உலகத்தில் இல்லை. இங்கிலாந்து கிரிக்கெட்டில் நாம் பார்த்திராத ஒரு பையனாக அவர் இருக்கிறார். அவர் எதிரணியின் ட்ரெஸ்ஸிங் ரூமில் ஒரு நடுக்கத்தை உண்டாக்குகிறார். இவ்வாறு வாகன் கூறினார்.

## மகளிர் டி20 உலகக்கோப்பை 2024: ஆஸ்திரேலிய மகளிர் அணி அறிவிப்பு

ஐசிசி மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரானது வரும் அக்டோபர் மாதம் வங்கதேசத்தில் நடைபெற இருந்தது. இத்தொடருக்கு இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க உள்ளிட்ட 8 அணிகள் நேரடியாக தகுதிப்பெற்ற நிலையில், இலங்கை மற்றும் ஸ்காட்லாந்து அணிகள் தகுதிச்சுற்றின் அடிப்படையில் இந்த டி20 உலகக்கோப்பை தொடருக்கு தகுதிபெற்றுள்ளன. மேலும் இத்தொடருக்கான போட்டி அட்டவணையையும் ஐசிசி அறிவித்திருந்தது.

வங்கதேசத்தில் உள்நாட்டு கலவரம் வெடித்த நிலையில் அங்கு ஆட்சி மாற்றமும் நடந்தது. இதன் காரணமாக திட்டமிட்டபடி ஐசிசி மகளிர் டி20 உலாகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அக்டோபரில் அங்கு நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்தது. மேலும் மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்க இன்னும் ஒருமாதம் மட்டுமே இடைவெளி உள்ள நிலையில் அதற்குள் நிலைமை கட்டுக்குள் வருமா என்பதும் கேள்விகுறியாகவே இருந்தது.

இதனையடுத்து மகளிர் டி20 உலகக் கோப்பை தொடர் வங்கதேசத்திலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஐசிசி சமீபத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இருப்பினும் இதில் போட்டிகள் எந்த மைதானத்தில் நடைபெறும் என்பது குறித்து எந்தவொரு அறிவிப்பும் வெளியாகவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் மகளிர் டி20 உலகக்கோப்பை தொடருக்கான ஆஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் இன்று அறிவித்துள்ளது. இதுவரை 6 முறை உலகக்கோப்பையை வென்றுள்ள ஆஸ்திரேலிய மகளிர் அணியானது, ஏழாவது முறையாக மீண்டும் கோப்பையை வெல்லும் உத்வேகத்துடன் இத்தொடரை எதிர்கொள்ளவுள்ளது.

அதன்படி அலிசா ஹீலி தலைமையிலான ஆஸ்திரேலிய மகளிர் அணியின் துணை கேப்டனாக தஹ்லியா மெக்ராத் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் டி20 உலகக்கோப்பை தொடருக்கான ஆஸ்திரேலிய அணி:

அலிசா ஹீலி (கே), டார்சி பிரௌன், ஆஷ்லே கார்ட்னர், கிம் கார்த், கிரேஸ் ஹாரிஸ், அலனா கிங், ஃபோப் லிட்ச்ஃபீல்ட், தஹ்லியா மெக்ராத், சோஃபி மோலினக்ஸ், பெத் மூனி, எல்லிஸ் பெர்ரி, மேகன் ஷட், அனாபெல் சதர்லேண்ட், டெய்லா விலேமின்க், ஜார்ஜியா வேர்ஹாம்

## சூழ்நிலையை புரிந்து கொள்ளவில்லை.. பாகிஸ்தான் கேப்டனை சாடிய ரமீஷ் ராஜா




வங்கதேசம் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் சென்றுள்ளது. இரு அணிகளுக்கு இடையேயான முதல் போட்டியில் யாரும் எதிர்பார்க்காத வகையில் பாகிஸ்தான் அணி வீழ்த்தி வங்கதேசம் சாதனை படைத்தது. இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் பாகிஸ்தானின் சொந்த மண்ணில் வங்கதேசம் அணி முதல்முறையாக வெற்றி பெற்றுள்ளது. இதனால் பாகிஸ்தான் அணி மற்றும் கேப்டன் குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் கேப்டன் ஷான் மசூத்துக்கு முன்னாள் வீரர் ரமீஷ் ராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் உகூறியதாவது:

முதலாவதாக அணி தேர்வில் தவறு ஏற்பட்டிருந்தது. நீங்கள் பிரதான சுழல் பந்துவீச்சாளர் இல்லாமல் இருந்தீர்கள். இரண்டாவதாக நம்முடைய வேக பந்துவீச்சாளர்களுக்கு இருக்கும் நற்பெயர் முடிவுக்கு வந்துவிட்டது.

இந்த தோல்வியை ஒரு நம்பிக்கை மீது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி ஆகும். இந்திய அணி ஆசியக் கோப்பையின் கடந்த ஆசியக் கோப்பையில் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமான சூழ்நிலையில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சின் பலவீனத்தை வெளியில் காட்டிவிட்டது. இப்போது பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சை எப்படி சமாளிக்க வேண்டும் என்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

நம்முடைய வேகப்பந்துவீச்சாளர்களின் வேகம் குறைந்து விட்டது. 125 முதல் 135 கிலோமீட்டர் வேகத்தில் வங்கதேசம் வேகப்பந்து வீச்சாளர்கள் அவர்களை விட சிறப்பாக இருந்தார்கள். ஷான் மசூத் கேப்டனாக உள்நாட்டில் நிரூபிக்க வேண்டும். ஷான் மசூத் தற்பொழுது கேப்டனாக தோல்வியில் இருக்கிறார்.

ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி தோற்றுப் பொழுது சூழ்நிலை கடுமையாக இருந்தது என்று நினைத்தேன். பாகிஸ்தான் அணி அங்கு தொடரை வெல்வது சாத்தியம் கிடையாது. ஆனால் நீங்கள் இப்பொழுது சொந்த நாட்டில் வங்கதேசம் அணிக்கு எதிராக தோற்று இருக்கிறீர்கள். கேப்டனாக ஷான் மசூத் கண்டிஷனை சரியாக புரிந்து கொள்ளவில்லை.

மேலும் பிஎஸ்எல் மற்றும் கவுண்டி போட்டிகளில் தான் ஒரு சிறந்த கேப்டன் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் ராவல்பிண்டி ஆடுகளத்தில் நான்கு வேகப்பந்துவீச்சாளர்களை அவர் எப்படி தேர்ந்தெடுத்தார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை? என்று கூறியிருக்கிறார்.

## வங்கதேச மக்களுக்கு ஆட்ட நாயகன் பரிசுத் தொகையை வழங்கிய முஷ்பிகுர் ரஹீம்




பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்துவரும் வங்கதேச அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியானது ராவல்பிண்டியில் நடந்து முடிந்துள்ளது. இப்போட்டியில் வங்கதேச அணியானது 10 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியதுடன், அந்த அணிக்கு எதிராக முதல் முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றியைப் பதிவுசெய்து சாதனை படைத்துள்ளது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக முஷ்ஃபிக்கூர் ரஹீம் தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் ஆட்டநாயகன் விருது வென்றதற்காக கிடைத்த பரிசுத்தொகையை வங்கதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அர்ப்பணிப்பதாக முஷ்ஃபிக்கூர் ரஹிம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

இந்த பரிசுத் தொகையை, வங்கதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடை அளிக்க விரும்பினேன். எனவே, நான் அவர்களுக்கு இந்த பரிசுத் தொகையை நன்கொடையாக வழங்க விரும்புகிறேன்.

வெளிநடுகளில் நாங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை என்பதால், இது இதுவரை என்னுடைய ஆட்டங்களில் மிகச்சிறந்த ஆட்டமாக நான் பார்க்கிறேன். மேலும் இப்போட்டிக்கு முன்னதாக நாங்கள் இங்கு வந்ததில் இருந்து தீவிரமாக தயாராகினோம். அதேசமயம் இந்த டெஸ்ட் தொடருக்கு முன், இரண்டரை மாத இடைவெளி இருந்தது.

மேலும் டி20 உலகக்கோப்பை தொடரில் விளையாடி வீரர்களுடன் அணியின் மற்ற வீரர்களும் நிர்வாகமும் அங்கு இருந்தனர். என்னுடைய சிறப்பான ஆட்டத்திற்க்கு பயிற்சியாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னால் முடிந்ததைச் செய்ய முயற்சிக்கிறேன்.

இவ்வாறு ரஹிம் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.